


EJ 04

CITAACC JOURNAL 2026 I APRIL

# திருக்குறள்



**குறள்:**

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு

**விளக்கம்:**

ஊக்கம் சுருங்க காரணமான
செயல்களை செய்ய கூடாது.
அதே போல், துன்பத்தில் கைவிடுவார்
நட்பினையும் கொள்ளக் கூடாது.




அனைவருக்கும் இனிய வணக்கம், மீண்டும் இந்த இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. மாதத்திற்கு மாதம், CITAACC இன் மின்னணு இதழானது, பல கட்டுரைகள், கவிதை, கதைகள், பயண கட்டுரைகள், குழுவின் பல்வேறு நிகழ்ச்சி பற்றிய செய்திகள் தாங்கி வெளிவருகிறது.

தலைவர் மற்றும் செயலரின் அறிக்கைகள், வரும் நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பாக, திட்டங்களின் தொகுப்பாக அமைகிறது.

கடந்த சில மாதங்களாக, இந்த இதழில் இடம் பெறும் செய்திகள், கதை, கட்டுரைகள் குறித்து உறுப்பினர்கள், தெரிவிக்கும் கருத்தும், வந்த வண்ணம் உள்ளது.

இவை அனைத்தும், இந்த இதழ் சரியான பாதையில் நடை போடுவது உறுதி செய்கிறது.

உறுப்பினர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் களமாக, பரிமாறிக்கொள்ளும் இடமாக, இந்த இதழ் முற்றிலும் மாறி வருகிறது. அறிவு, கல்வி, தொழில், நட்பு, குடும்ப நிகழ்ச்சிகள், பயணங்கள், எண்ண சிதறல்கள் அனைத்தையும் படம் பிடிக்கும் கருவியாக, காலம் காட்டும் நிலை கண்ணாடியாக, இந்த இதழ் விளங்குகிறது.

இதன் செயல் பாடுகள் இன்னும் மேம்படும், உங்கள் படைப்புகளால் எங்களை திணற வைக்க வேண்டும் என அவாவுடன் கோரும்

அன்புடன்
உங்கள் ஆசிரியர்

**பொறுப்பு துறப்பு:**

இந்த இதழில் வெளி வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் அனைத்திலும் உள்ள கருத்துக்களின் உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை, துல்லியம், பொருள் ஆகியவற்றிற்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாவார். CITAACC மின்னணுஇதழின் ஆசிரிய குழுவோ, CITAACC குழுவோ எவ்விதத்திலும் பொறுப்பாகாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் குழு

# FROM THE PRESIDENT'S DESK



P.Saravanaraja
President - CITAACC
1988 - Civil

Dear Members,

By the time this issue reaches you, the results of the Tamil Nadu elections would have been declared. As a matter of principle, our association maintains a clear and consistent stance of remaining non-political across all our communications and platforms. While we acknowledge that politics is an inseparable part of public life, we firmly believe that our forum is best reserved for fostering unity, camaraderie, and meaningful engagement among our members, old students of a premier Institute.

Our association is a vibrant collection of accomplished professionals bound together by enduring friendships and cherished memories of our college days. The essence of our mission lies in strengthening these connections—deepening the bonds and exploring ways in which we can support and uplift one another.

Owing to the general elections and intense summer, we did not host any events during April. However, I am pleased to share that our next CXO Meet is scheduled towards the end of May, and we look forward to enthusiastic participation from all members.

With the holiday season upon us, I encourage each one of you to take this opportunity to unwind and spend quality time with your families.

Wishing you all a joyful and rejuvenating holiday season.

Warm regards,
**P.Saravanaraja**

# FROM THE SECRETARY DESK



**Ashokraj Vadivelu**
Secretary - CITAACC
1993 - Mechanical

Welcome to the April edition of the CITAACC Magazine. As we move forward into the new financial year, we wish everyone in business and professional life a successful and fulfilling journey ahead. While uncertainties have become a part of our everyday lives, we have learned to embrace them in our own unique style and continue to move forward with confidence.

Over the past few weeks, we have had several internal discussions on how to make our magazine more personal and engaging for our fraternity.

We are happy to share that this renewed energy and vibrancy will reflect clearly in the coming editions. Going forward, the magazine will feature more CIT-associated content, strengthening our shared identity and connection.

Each edition will include dedicated sections highlighting both happy and solemn occasions within our CIT fraternity, along with contributions and articles from alumni across different batches. We also plan to bring in insights and experiences from entrepreneurs among our alumni, updates and developments from our College, and many other interesting features that keep us connected and informed. We warmly welcome your suggestions and ideas to help us grow this platform further and look forward to hearing from you.

As the holiday season approaches, our younger CIT brothers and sisters may be enjoying quality time with their children, while the senior members are likely planning joyful trips with their grandchildren.

Let us cherish every moment, capture these memories, and keep a journal of the happy times, memories we can always return to and rejoice in.

Until we meet again in the next edition, stay connected and enjoy every moment.




சென்ற இதழ் தொடர்ச்சி...

NSK, MKT ஸ்ரீராமுலு ஆகியோரின் அடியாட்களால் திட்டமிட்டு தாக்கப்பட்டு பின்னர் மருத்துவமனையில் இறந்து போனார் லட்சுமிகாந்தன். இச்சம்பவத்தில், மேற்சொன்ன மூவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டு ஆண்டு சட்டப் போராட்டத்தின் பின்னர்தான் விடுவிக்க பட்டனர். சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும் NSK பல திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றார். ஆனால் MKT தேறவில்லை!

எம்.ஜி.ஆர்க்கு அது திரையுலகில் ஆரம்ப காலக்கட்டம். ஒரு படப்பிடிப்புக்காக கல்கத்தா சென்று இருந்தார்கள். ஒருநாள் படப்பிடிப்புக் குழுவினர்கள் ஓர் ஓடையை தாண்டி செல்ல வேண்டிய நிலை நேர்ந்தது. அனைவரும் ஓடையில் இறங்கி கடக்க ஆரம்பித்தனர், கலைவாணர் உட்பட. தனக்குரிய அந்த துடிப்பான முறையில், அனைவரையும் போல இறங்கி கடக்காமல், அந்த ஆறடி ஓடையை ஒரே தாவில் தாவிக் குதித்தார்

எம்.ஜி.ஆர் அவர்கள். தாவிக் குதித்த



மறு நொடி எம்.ஜி.ஆர் அவர்களது செருப்பு அறுந்துப் போனது. உடனே கலைவாணரிடம், "வாங்கண்ணே ஒரு புது செருப்பு வாங்கி வரலாம்..." என்று கூறியருக்கிறார் எம்.ஜி.ஆர். இன்று வேண்டாம் தம்பி, நேரமாகிவிட்டது நாளை போய் வாங்கிக்கொண்டு வரலாம் என்று பதில் அளித்திருக்கிறார் கலைவாணர். மறுநாள் காலை மீண்டும் கலைவாணரின் அறைக்கு சென்று, செருப்பு வாங்க அழைத்திருக்கிறார் எம்.ஜி.ஆர். அப்போதும் உடன் கிளம்பவில்லை கலைவாணர். அதற்கு பதிலாக எம்.ஜி.ஆரிடம் ஓர் பார்சல் கொடுத்தார்.

கலைவாணர் கொடுத்த பார்சலை திறந்த பார்த்த எம்.ஜி.ஆர்க்கு ஆச்சரியமாக இருந்தது. அதில், அவரது அறுந்த செருப்பு தைத்து வைக்கப்பட்டிருந்தது.



உடனே, "என்ன அண்ணே, புது செருப்பு வாங்கலாம்னு கூப்பிட்டா, பழசையே தரீங்களே" என்று கலைவாணரிடம் வினா எழுப்பினார் எம்.ஜி,.ஆர். "உங்க அம்மா, உன்னையும், உன் அண்ணனையும், அனுப்பியது பணம் சம்பாதிக்க தான். பழைய செருப்பு நல்லாதான் இருக்கு, அத நானே தைத்சு வெச்சுட்டேன். எந்த பொருளாக இருந்தாலும் அதை முழுமையாக பயன்படுத்த வேண்டும்" என்று கூறினாராம். கலைவாணர் கூறிய நாள் முதல் அவர் இறக்கும் தருவாயின் வரையிலும் எந்த பொருளாக இருந்தாலும் அதை முழுமையாக பயன்படுத்தும் பழக்கத்தை பின்தொடர்ந்து வந்தார் எம்.ஜி.ஆர்.

இப்போது கதாநாயகர்கள், நகைச்சுவை நடிகர்கள் பேசும் வசனம் பிரபலம் ஆகி Punch dialagoue எனப்படுகிறது. இதற்கெல்லாம் முன்னோடி, NSK. அசோக்குமார் (1941) படத்தில், 'சொன்னா சொன்னதுதான், எவரு இவரு !' எனும் வசனம் மிக பிரபலமாகி அனைவராலும் பேசப்பட்டது. படம் வெளிவந்த பின்னர், பெட்ரோல் நிலையத்தில், தம் காருக்கு பெட்ரோல் போட்டு விட்டு "எவ்ளோ" என்று கேட்க, பெட்ரோல் போட்ட சிறுவன் 'இருபத்தி ஐந்து ரூபாய்' என கூறிவிட்டான். அவ்வளவு பணம் ஆகவில்லை. ஆனால், கூறிவிட்டு உடன் அந்த பையன், வந்திருப்பது NSK என்று தெரிந்துகொண்டு, 'சொன்னா சொன்னதுதான், எவரு இவரு' என்று கூறினான். உடனே கலைவாணர், 'ஐம்பது ரூபாய் கொடுத்துவிடலாம், போய் ரசீது வாங்கி வா' என்று பணித்தார். பையன் சென்றதும், வண்டியை கிளப்ப உத்தரவிட்டுள்ளார். ரசீதுடன் ஓடி வந்த பையன், வண்டி பணம் கொடுக்காமல் செல்வதை கண்டு திகைத்து, முதலாளியிடம் சொல்ல, அவர் சிரித்துக்கொண்டே, NSK தானே பார்த்து கொள்ளலாம் விடு என்றார். அப்போது பணம் கொடுக்காமல் வந்து விட்டாலும் NSK சும்மா இருக்கவில்லை. ஒரு மணி ஆர்டரில் 50 ரூபாயை அனுப்பி, முத்தாய்ப்பாக "சொன்னா சொன்னதுதான், எவரு இவரு ' என்று குறிப்பிட்டு இருந்தார். மேலும் பெட்ரோலுக்கு உண்டான பணத்தை எடுத்து கொண்டு மீதத்தை, சிறுவனுக்கு கொடுக்கும்படி உரிமையாளருக்கு எழுதியிருந்தார்.

புரட்சிகரமான கருத்துக்களை படத்தில் எளிதாக புகுத்திவிடுவதில் கலைவாணர் வல்லவர். முதல் தேதி (1955) சிவாஜி கணேசன் உடன் நடித்த படத்தில், நடுத்தர வர்கத்தின் திண்டாட்டத்தை மிக அழகாக தானே பாடியிருப்பார். 'தேதி ஒன்னிலிருந்து இருபதுவரையில் கொண்டாட்டம் கொண்டாட்டம், தேதி இருபத்து ஒன்னிலிருந்து முப்பது வரையில் திண்டாட்டம் திண்டாட்டம் தென் பழனி

ஸ்ரீரங்கம் போவதற்கு உண்டியலில பணம் போட்டுவைப்பார் தேதி ஒன்னிலே, அன்புடனே போட்டு வைத்த உண்டியலில் வாயை அகலப்படுத்தி ஆட்டி பார்ப்பான் தேதி இருபத்து ஒன்னிலிருந்து' என நீளும். இதை விட, இன்று வரை அருமையாக, மக்கள் படும்பாட்டை எடுத்து சொல்ல இன்னொரு பாட்டு பிறக்க வில்லை என்பது வரலாறு. இன்றைய தலைமுறைக்கு இதெல்லாம் புது செய்தியாக இருந்தாலும், அன்றைய காலத்தை அழகாக படம் பிடித்து காட்டுவது இப்பாடல். NSK இயக்கிய படம் 'பணம்'; இதில் சிவாஜி, பத்மினி உடன் கலைவாணர் ஆகியோர் நடித்திருந்தனர். அதில், 'பணத்தை எங்க தேடுவேன்' என்ற பாடல் மிக பிரசித்தம். "கருப்பு மார்க்கெட்டில் கலங்குகின்றாயோ, கஞ்சர் கையில் சிக்கிக்கொண்டாயோ, கிண்டி ரேஸில் சுத்தி கிறுகிறுத்தாயோ' என்று பாடல் கலைவாணர் பாடும் போது, அரங்கம் அதிரும். இன்றும் கேட்டால், இனிமையும், பொருளும்,




சிரிப்பையும் வரவழைக்கும் பாடல் இது. சிவாஜி, SSR, பத்மினி ஆகியோருடன் கலைவாணர் இணைந்த 'ராஜா ராணி' (1956) பீம்சிங் இயக்கத்தில் வெளிவந்த படத்தில், தன்னுடைய மச்சானான 'குலதெய்வம்' ராஜாகோபாலை கடிந்து கொண்டதற்கு கோபித்து கொள்ளும் மனைவி மதுரத்தை சமாதானப்படுத்த சிரிப்பின் வகைகளை பிரமாதமாக பாடலாக பாடியிருப்பார். சிரிப்பில் இத்தனை வகை உண்டு என்பதே அன்றிலிருந்து தான் தெரிய வந்தது என்றால் மிகையில்லை.

"இது அதிகாரிகளின் ஆணவ சிரிப்பு ", "இது அடங்கி போகின்றவனின் அசட்டு சிளீப்பு", "இது சங்கீத சிரிப்பு", "இது நமட்டு சிரிப்பு" என்று ஒவ்வொரு வகையையும் அழகாக தரம் பிரித்து காட்டியிருப்பார். ஒவ்வொரு சிரிப்பின் இறுதியிலும், அந்த சிரிப்பு வகையினை, நடித்து காட்டியிருப்பார். ஒரு கலைஞனின், திறமைக்கும், தனித்துவத்திற்கும், தகைசால் தன்மைக்கும் (Versatility) இதை விட ஒரு சான்று இருக்க முடியாது.



N.S. கிருஷ்ணன் – உடுமலை நாராயண கவி – C.N. அண்ணாதுரை
நடிகர் – பாடல் ஆசிரியர் – எழுத்தாளர்

பேரறிஞர் அண்ணாவிடம், தங்களுடைய சொந்த தயாரிப்பில் படத்திற்கான கதை ஒன்றை கேட்க, ஆங்கில படமான Gary Cooper நடித்த 'Mr. Deeds goes to town' (1936) ஐ தழுவி எழுதப்பட்ட படம்தான் நன்றாக ஓடி சாதனை படைத்த "நல்ல தம்பி". பி.பானுமதி அவர்கள் முதன்முதலில் தமிழில் நடித்த படம். கலைவாணர், மதுரம், பானுமதி, சஹஸ்ரநாமம் ஆகியோர் தயாரித்த படம்.

. இதில் பல சிறப்பம்சங்களை புகுத்தியிருப்பார் NSK. நந்தனார் சரிதத்தை மாற்றி கிந்தனார் சரிதம் என்று கதாகாலட்சேபம் மூலமாக வெளுத்து வாங்கியிருப்பார். இந்த கிந்தன் வரலாறு உருவான விதம் குறித்து இந்த பகுதியில் விவரிக்க இயலாது என்றாலும், அதுவும் ஒரு சுவையான நிகழ்ச்சியே. இந்த காலட்சேபத்தில், ரயிலை தீண்டாமையை ஒழிக்கும் ஒரு பொருளாக பாடியிருப்பார். இந்திரலோகம் செல்லும் கோமாளியாக, மதுவிலக்கினை உயர்த்தி ஒரு பகுதியையும் அமைத்து இருப்பார்.

ஒரு அரசாங்கமோ, ஒரு தனிப்பெரும் இயக்கமோ செய்ய வேண்டிய செயலை தனியொருவனாக செய்து இருப்பதுதான் அவரின் சாதனை. 'நாட்டுக்கு சேவை செய்ய நாகரிக கோமாளி வந்தானைய்யா' என சமூக விழிப்புணர்வோடு பாடியிருப்பார். இப்படத்தின் உச்ச அடையாளமாக உயர்ந்தது, அவரின் காலத்தை விஞ்சிய, தொலைநோக்குடன் கூடிய விஞ்ஞான பார்வை. ஒரு கலைஞனின், கவிஞனின், எழுத்தாளனின் கற்பனை தூரம், ஒரு விஞ்ஞானியின் பார்வை, செயல்பாடு ஆகியவற்றை கூட விஞ்சிவிடும் என்பதற்கும் அடையாளம் தான் இப்பாடல். அது, 'விஞ்ஞானத்தை வளர்க்க போறேண்டி, மேனாட்டாரை விருந்துக்கு அழைச்சி காட்ட போறேண்டி' எனும் பாடல். இதில் இவரின் கற்பனை தூரம், வீச்சு, நம்மை இந்த 2026 இல் கூட மெய்சிலிர்க்க வைக்கிறது. 'ஒரு பட்டன் ஐ தட்டி விட்டா தட்டுலே இட்லியும், காபியும் வந்திடனும், காலம் காட்டும் கருவியும் வேணும், கொல்லைப்புறத்தில் குழாயும் போடோணும், குளிர் மெசினு சேத்துவைக்கோணும், '

'பெண்சாதி புருஷன் இல்லாமே குழந்தையும் பொறக்கறாப்போல விஞ்ஞானத்தை வளர்க்க போறேண்டி' என்று நீளும் இப்பாடலில், மேலை நாட்டு பெண்களையும், நம்ம கிராமப்புற பெண்களையும் வெகு அழகாக நிகர்படுத்தி இருப்பார்.

இன்று கேட்டாலும் பொருத்தமாக இருக்கும், இன்றைய சூழலை தெரிந்து கொண்டு, கற்பனை செய்தது, எப்படி என்பதுதான் விந்தை. இப்படம் அமோக வெற்றி பெற்றவுடன், பேரறிஞர் அண்ணாவிற்கு ஒரு காரை பரிசளிக்க முன்வந்தார். 'நான் என்ன பேச, எழுத, பரப்ப நினைக்கிறேனோ அதனை நீங்கள் எளிதாக திரையில் சொல்லி விடுகிறீர்கள். அது மக்களை விரைவாக சென்று அடைகிறது. எதற்கு எனக்கு இந்த பரிசு; இதன் மூலம் நான் ஒரு இடத்தை சென்று அடைந்து பேசுவதற்கு முன், உங்கள் கருத்து அங்கு சென்று விடும்.

எனவே, இப்பரிசு வேண்டாம்' என அண்ணா நாகரீகமாக மறுத்தாலும், கலைவாணர் விடாமல், அண்ணாவிற்கு பரிசளித்தார்.

M.R.ராதா NSK இடையேயான நட்பு அலாதியானது. MRR அறிமுகமான ராஜசேகரன் படத்தில், கலைவாணர், மதுரம், துரைராஜ் நடித்த ஏமாந்த சோணகிரி கிளைக்கதை இணைக்கப்பட்டது. ஒரு முறை, தனக்கு வரவேண்டிய வாய்ப்பு கவிஞர் காமாட்சிக்கு அளிக்கப்பட்டதாக MRR கலைவாணர் மீது கோபம் கொண்டு, அவரை சுட்டுவிடுவேன் என கூறி, துப்பாக்கியும் கையுமாக உலவி இருக்கிறார். கேள்விப்பட்ட NSK உடனே நேரில் சென்று பார்த்து, "ஏதோ என்னை சுட்டுவிடுவேன் என்றாயாமே இப்போது சுடு" என்று கூறவும்,

செய்வதறியாது திகைத்து விட்டார் ராதா. நாத்தழுதழுக்க மன்னிப்பு கோரவும், NSK ராதாவை கட்டி அணைத்துக் கொண்டாராம்.

தன்னிடம் உதவி கேட்டு வந்த, அல்லது, உதவி தேவைப்படும் என்று தெரிந்தாலே, தாராளமாக உதவும் மனம் NSK-விடம் உண்டு. பின்னாளில், பொன்மனச்செம்மல் என்று போற்றப்பட்ட MGR க்கே முன்னுதாரணமாக திகழ்ந்தது கலைவாணர் என்று பல பேட்டிகளில் MGR தெரிவித்துள்ளார். 'கொடை வள்ளல்' என தன்னை புகழ்ந்த போதெல்லாம், MGR, தனக்கு முன்னோடி NSK தான் என்று அடக்கமாக கூறுவதுண்டு.



தன் வீட்டில் திருட வந்தவனை பிடித்ததும், பசியால்தான் திருட முனைந்ததாக கூறியவுடன், மதுரத்தை அழைத்து, 'இவர் என்னுடைய உறவினர், இவருக்கு நல்லா சாப்பாடு போட்டு அனுப்பவும்' என்று கூறியுள்ளார்.



ஒரு முறை நிறைமாத கர்ப்பிணி பெண் ஒருவர், NSK, மதுரத்தை சந்தித்து, தனக்கு வருமானம் இல்லை, கணவர் வேலைக்கு செல்வது இல்லை உதவி தேவை என்று கோரியுள்ளார். உடனே, NSK மதுரத்திடம் "இரு நூறு ரூபாய் கொண்டு வா' என்று சொல்லி அப்பணத்தை அந்த பெண்ணிடம் வழங்கியுள்ளார். அப்பெண் வாங்கி கொண்டு செல்லும் போது ' நீ வயிற்றில் கட்டி வந்த பானைக்கு நூறு உன் சிறந்த நடிப்புக்கு நூறு ஆகமொத்தம் இரு நூறு, போய் வாம்மா மகராணி" என்று கூறினாராம். ஏமாற்று வேலை என்றாலும் உதவி புரிந்து விடுவது அவரின் சீரிய குணம்.

கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி நிதிக்காக, இலவசமாக சுமார் 1800 நாடகங்கள் நடத்தியிருக்கிறார். ஒரு நிகழ்ச்சிக்கு சென்றபோது, கையில் பணமில்லாதலால், தன்னிடமிருந்த வெள்ளி கூஜாவை உதவி கேட்டு வந்தவர்க்கு கொடுத்திருக்கிறார். தந்தை பெரியார் மீதும், அண்ணா, காமராஜ் ஆகியோரின் மீதும் மிகுந்த பற்றும் அன்பும் கொண்டிருந்தார் கலைவாணர்.

NSK கடைசியாக கலந்துகொண்ட நிகழ்ச்சி, சேலம் மாவட்டத்தில் அண்ணாவின் பட திறப்பிற்க்கு சென்றது.

தன்னுடைய உருவப்படத்தை திறப்பதிற்கு தயங்கிய அண்ணாவிற்காக NSK கலந்துகொண்டார். அதே போல், அண்ணாவின் கடைசி பொது நிகழ்ச்சி, கலைவாணரின் உருவச்சிலையை சென்னை திநகர்இல் திறந்து வைத்தது.






கடைசி நாட்களில், கையில் பணமின்றி, நோய்வாய் பட்டு, சென்னை அரசு பொது மருத்துவமனையில் இருந்தபோது, அங்கும் தன்னுடைய இயல்பு மாறாமல், நகைச்சுவையுடன், அனைவரையும் மகிழ்வித்தார் கலைவாணர். தன்னை சந்திக்க வந்த MGR கட்டு கட்டாக பணம் கொடுக்க, 'சில்லறையாக தாப்பா ராமச்சந்திரா... என்னை பார்க்கவரும் அனைவருக்கும் கொடுக்கவேண்டும் அல்லவா?' என்றாராம். இன்னொரு முறை, அவரை பார்க்க MGR வந்த போது, NSK-விற்கு மருத்துவர்கள் மருந்து கொடுத்து நான்கு மணி நேரத்திற்கு பிறகே எழுப்ப வேண்டும் என கூறியிருக்க, , தான் வந்ததை சொல்லி அவரை தொல்லை படுத்த வேண்டாம் பிறகு வந்து பார்க்கிறேன் என்று MGR மதுரத்திடம் சொல்லி கிளம்பி உள்ளார். கண் விழித்த பின் NSK, 'MGR வந்து சென்றானா' என கேட்க, 'இல்லை' என்று மதுரம் கூற, 'இல்லை, இராமச்சந்திரன் வந்திருப்பான், தலையணைக்கு அடியில் 2000 ரூபாய் பணம் கட்டாக இருக்கு. MGR தவிர வேறு யாரும் இதை செய்ய மாட்டார்கள்', என கூறினாராம். இறுதி நாட்கள் வரை ஈதலும், இசை பட வாழ்தலும் கொள்கை என கொண்டு வாழ்ந்தார் NSK. மருத்துவமனையில், கடைசி நாட்களில் அவருடைய நலம் விரும்பிகள், ரசிகர்கள் ஓடோடி வந்து கதறி அழுது ' அண்ணே, நீங்கள் இறந்து விட்டதாக ஊரெங்கும் வதந்தி, சில இடங்களில் திரை காட்சிகளைக்கூட நிறுத்தி விட்டனர்" என அங்கலாய்த்து பேச, உடன் NSK 'என்ன... நம்ம சாகலைன்னா விட மாட்டாங்க போலிருக்கே; ஒரு முறையாவது செத்து விட வேணும்' என்று நகைச்சுவையாக சிரித்துக்கொண்டு சொன்னாராம். இந்த தருணத்திலும் நகைச்சுவை என்பது NSK வால் மட்டுமே சாத்தியம். உலகில் வேறு எவரும் நினைத்து கூட பார்க்காதது. தன்னை நாடி வந்தவர்க்கெல்லாம் வாரி வாரி வழங்கி, இல்லை என்று கூறாமல், அதனாலேயே நலிந்து போனவர் NSK. இவரது இறுதி ஊர்வலம் பெரும் திரளான மக்கள் கூட்டத்தின் இடையே நகர்ந்தது. அவர் மறைவுக்கு பின்னால் அவர் குடும்பம் மிகவும் சிரமப்பட்டு வாழ்ந்து வந்தது.

கலைவாணர் மறைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னர், அமரர் நடிகர் விவேக் அவர்களுக்கு, அப்போதைய தமிழ் நாடு முதல் அமைச்சர் கருணாநிதி அவர்கள், "சின்ன கலைவாணர்" எனும் பட்டத்தினை வழங்கி சிறப்பித்தார்.





இதன் காரணம், மறைந்த விவேக் அவர்களும் கலைவாணர் NSK வை போலவே, தான் சம்பந்தப்பட்ட நகைச்சுவை காட்சிகளில், சமூகத்திற்கு உபயோகமுள்ள பல நற்கருத்துக்களை, மூட நம்பிக்கையை கேலி செய்யும் காட்சிகள், வசனங்கள், ஆகியவற்றை புகுத்தி, மக்களிடையே பரப்பி வந்தார் . இதனாலேயே, விவேக்கிற்கு சிறப்பு பட்டம் வழங்கப்பட்டது.

ஒரு கலைஞன் மறைந்து, பல ஆண்டுகள் ஆன பின்னரும் அவரின் ஞாபகமாக பட்டம் வழங்கப்படுவது, மறைந்தாலும் புகழோடு வாழ்கிறார் என்பதாகத்தான் பொருள்.

“கலை” எனும் சொல்லுக்கும், “சேவை” என்ற சொல்லுக்கும் சம்மந்தமே இல்லை என்ற வகையில் “கலைசேவகர்களை” நாம் பார்த்து பழகிவிட்ட காரணத்தினால், NSK போன்றோரின் வாழ்க்கை ஒரு புரியாத புதிர் அல்லது விந்தையாக இருக்கக்கூடும். ஆனால், தமக்கு நல்ல வாழ்க்கையையும், வாய்ப்பையும் அளித்த சமூகத்திற்கு, உலகிற்கு, தன்னால் இயன்றதை திருப்பி அளித்தவர்கள் வெகு சிலரே. அவர்களே ’மனிதருள் மாணிக்கம்’ என போற்ற தக்கவர். இம்மாமனிதர் இறந்த போது, அவர் வயது வெறும் 49 தான் (அவரின் உற்ற நண்பர் தியாகராஜ பாகவதரும் 49 வயதிலேயே காலமானார்) மூட நம்பிக்கை புரையோடிப்போன, சாதி பிரிவுகள், அதன் பின்னணியில் பல கொடுமைகள் நிறைந்த சமூகத்தில், இவற்றையெல்லாம் எதிர்த்து, சிந்தனை, அறிவு, விழிப்புணர்வை தூண்டும் விதமாக தாம் கொண்ட தொழிலையே மூலதனமாக வைத்து, தம் வாழ்க்கையினை பகடையாய் நிறுத்தி, எது வந்த போதும், துணிவுடன் நின்று, தன்னை நாடியவர்க்கெல்லாம் ஓடி சென்று உதவி, ’வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரின்’ வரலாற்று சிதறல்களை தொகுக்கும் இப்பணியே, இக்கட்டுரை ஆசிரியர்களான எங்களுக்கு கிடைத்த பெரும் பேறாக எண்ணி உவகை அடைகிறோம்.

மீண்டும் சிந்திப்போம் வேறொரு சாதனையாளருடன் ...

# ALTERNATE COOKING FUELS

## India's Path to Energy Sovereignty & Clean Kitchen Transition

IOT & ESG Intelligence April 2026





Karthik Swaminathan
1999 - Mechanical

continued...

## Fuel Comparison Matrix

| Fuel Type | Cost vs LPG | Import Risk | Carbon Impact | Readiness |
|---|---|---|---|---|
| **Electric (Induction)** | ~20% Cheaper | Low | Low-Zero* | High |
| **Biogas / CBG** | Comparable | None | Near-Zero | Medium |
| **Solar Cooking** | Free (Opex) | None | Zero | Low-Medium |
| **PNG** | 14% Costlier | High | Medium | High (Urban) |
| **LPG (Baseline)** | Baseline | Very High | Medium | Very High |
| **Biomass (Traditional)** | Cheapest | None | Very High | Very High |

## The IoT & ESG Opportunity

***Smart kitchens are the next frontier. IoT + Clean Fuel = Measurable ESG outcomes.***

The clean cooking transition is not just an energy challenge – it is a technology and data opportunity. IoT-enabled cooking infrastructure creates measurable, verifiable ESG outcomes that can be monetised through carbon markets, reported in sustainability disclosures, and tracked by regulators in real time.

**Smart Biogas Monitoring**

Sensors on biogas plants track gas yield, methane quality, temperature, and pressure – enabling predictive maintenance and remote diagnostics.

**E-Cooking Load Analytics**

Smart plugs and meters on induction cooktops provide household-level consumption data to utilities for demand forecasting.

**Solar Cooker Optimisation**

Irradiance and temperature sensors automate cooking schedules and alert users to optimal cooking windows.

### Emissions Tracking

Cookstove IoT modules measure combustion efficiency and generate verifiable carbon credits under VERRA/Gold Standard frameworks.

### Supply Chain Intelligence

Real-time clean cooking dashboards for policymakers combining LPG tracking, biogas plant yield monitoring, and distribution analytics.

## ESG Framework Alignment

| Framework / Goal | Alignment | Metric |
|---|---|---|
| **SDG 7.1.2** | Clean & Affordable Energy | % households using clean fuels |
| **SDG 13** | Climate Action | tCO2e avoided per year |
| **SDG 3** | Good Health & Well-Being | Indoor PM2.5 reduction |
| **GRI 302** | Energy Consumption | kWh / GJ per household |
| **TCFD** | Climate Risk Disclosure | Fossil fuel import exposure |
| **BRSR (India)** | Business Responsibility | Clean energy access & emissions |

# Policy Recommendations

India has demonstrated that policy can drive massive energy transitions – PMUY's success is proof. The same architecture – subsidies, infrastructure mandates, and awareness campaigns – must now be applied to the next wave of clean cooking fuels.

# Policy Recommendations

India has demonstrated that policy can drive massive energy transitions – PMUY's success is proof. The same architecture – subsidies, infrastructure mandates, and awareness campaigns – must now be applied to the next wave of clean cooking fuels.

**01** **E-Cooking Incentive Scheme**

Introduce targeted subsidies for induction cooktop purchase in urban households, mirroring PMUY's LPG model. A one-time subsidy of □2,000-3,000 per unit would accelerate adoption among middle and lower-income groups.

**02** **CBG Scale-Up Mission**

Fast-track the National Bioenergy Programme – target 10 million biogas plants by 2030. Mandate biogas connections in new housing societies and require kitchen waste segregation at source.

**03** **Carbon Credit Certification for Clean Cookstoves**

Develop an India-specific carbon credit standard for IoT-verified clean cookstove emissions reductions. This unlocks private capital and creates sustainable revenue streams for rural energy entrepreneurs.

**04** **Smart Kitchen Infrastructure Fund**

Create a dedicated □500-crore fund for IoT-enabled cooking infrastructure in public institutions – schools, hospitals, defence canteens, and government offices.

**05** **ESG Disclosure Mandate for Energy Companies**

Require oil marketing companies and cooking fuel distributors to disclose Scope 1, 2, and 3 emissions, import dependency ratios, and clean fuel transition roadmaps in annual BRSR filings.

# The Road Ahead

India's alternative fuels market is projected to grow at a CAGR of 13% from 2025 to 2030, reaching USD 40.4 million by 2030. Hydrogen – while nascent – is the fastest-growing segment for the next decade. The trajectory is clear: India's cooking energy mix will diversify, and those who build the infrastructure, technology, and financing mechanisms for this transition will define the next energy economy.

## 2030 Milestones

| | |
|---|---|
| **2026-27** | Induction cooktop adoption reaches 50M urban households; Smart meter rollout covers 20M e-cooking connections |
| **2027-28** | 10 million biogas plants operational; CBG blending mandate introduced in commercial kitchens |
| **2028-29** | Carbon credit market for clean cookstoves reaches □1,000 crore annually; IoT monitoring deployed in 1M+ biogas units |
| **2029-30** | LPG import dependency drops below 50%; E-cooking becomes the primary fuel in urban India |

*This white paper is intended for informational and advocacy purposes. Data referenced from MoPNG, IEEFA, Down To Earth, IISD, ScienceDirect, and IndianOil. Views represent the author's independent analysis.* *© 2026 Karthik Swaminathan. All Rights Reserved.*

#IoT #ESG #EnergyTransition #CleanCooking #IndiaEnergy #Sustainability #Biogas #ElectricCooking #ClimateAction #FutureOfEnergy

# சிஜடி சினிமா என்னும் அன்பு சிறைக்கு...






மு. முனியாண்டி

1980-பொதுவியல்


1985 ஜுன்.. அப்பதான் நாங்க கல்யாணம் முடித்த நேரம் .. புது பொண்ணாய் வீட்டுக்காரம்மா "நாங்க அடிக்கடி சினிமா போவோம் எங்கப்பா வெளியூர்ல வேலை பார்த்தங்களா எங்கம்மா பக்கத்திலே இருக்கிற வெங்கடேஸ்வரா கொட்டகைக்கு கூடி போவாங்க நான் போற வழியில இருக்குற முனியாண்டி கோவிலை பார்த்து சாமி.. போன பிறகு தான் படம் போடணும் முனு கன்னத்திலே போட்டுக்கிட்டே ஓடுவோம் என வெள்ளை மனசான அம்மணி சொல்லிட்டு , "நீங்க எப்படி?' ன்னு கேட்டப்போ, நான் சிஜடி ஆண் மகனாச்சே ..இது , ஒருவருக்கு ஒருவர் பழைய பிறந்த வீட்டிலே வளர்ந்த கதை சொல்லி கெத்து காட்டுற நேரமாச்சே .

ஆனா மறைக்க வேண்டியதை மறைத்து சொல்ல வேண்டியதை கெத்தா சொல்லணுமுல்ல . சினிமாவெல்லாம் எனக்கு இஷ்டம் கிடையாது என பொய் சொல்லாம சிஜடி சினிமா கதை பிட்டு படம் போல போட்டேன் ஆனாலும் சிஜடி சினிமா நேரம் நாம நினைத்தாலே நமக்குள்ளே ஒரே பரவசம் தான் ..அதுவும் திருவில்லிப்புத்தூர் போல இரண்டும் கெட்டான் நகர மக்களுக்கு சினிமா தானே மன மருந்து. சின்ன வயதில் சின்ன அத்தை எல்லா MGR, ஜெமினி கணேசன் படத்திற்கும் கூட்டி போவாங்க .படகோட்டி, மாட்டுக்காரவேலன், தேனிலவு . தரை டிக்கெட் மட்டுமே 1000 பேர் பார்க்கிற அளவுக்கு சினிமா கொட்டகை . என் அத்தைக்கு SSR, ரங்காராவ் சிவாஜி படம் எல்லாம் பிடிக்காது ஏன்னா அவர் படம் குடும்ப நடித்து அழவைத்து விடுவார். என் அப்பாவும் ஞாயிறு மாலை கடை அடிச்சிட்டு நேர படம் தான் கூட்டி போவார். அவருக்கு ரங்காராவ் சிவாஜி படம் பிடிக்கும். ஒரு ஞாயிறு அந்த "நடு இரவில்" திகில் படம் ஓடுது . கொட்டகையே பயத்தில அமைதியா இருக்குது அஞ்சாம் வகுப்பு பய நான் ஊ என மெல்லிய குரல்ல ஊளையிட கொட்டகையே அதிர , எங்கப்பா என் முதுகில் போட்ட அடி இன்னமும் வலிக்குதுன்னே ஆனா 6ஆம் முதல் வகுப்பு நண்பர்களுடன் தின சீட்டு 5 பைசா சனிக்கிழமை மாட்னி ஷோ முடிந்ததும் மாயா ஹோட்டல் புரோட்டா சால்னா வழக்கமானது . அப்புறம் அய்யநாடார் காலேஜ் இரண்டாவது சனி " free night "

சிவகாசி பழனியாண்டவர் தியேட்டர் ராஜா ரத்னம் மகளிர் காலேஜ் அக்காமார் சங்கமம் .."அவள் ஒரு தொடர் கதை" பார்த்துட்டு 4மைல் நடந்தே வந்து விளக்கணைச்சுட்டு வார்டன் காதுக்கு கேட்காம பாலச்சந்தரையும் சுஜாதா வையும் அலசுவோமுன்னு சினிமா கதையை சொல்லிகிட்டே பாண்டியராஜன் ஆண்பாவம் படம் பார்த்தோம்... சரிங்க " சிஐடி சினிமான்னு ஏதோ கதைன்னு சொன்னேங்க .அதை சொல்லுங்க .ம் ..மீண்டும் கெத்து காட்ட வாய்ப்பு தான் இன்னமும் கதை கேட்ட வீட்டும்மாவுக்கு சிஐடி என்றாலே ஒரு திரில் தான்.

ரீல் ஆரம்பம் ...சிஐடி யில் 16MM படம் போடுவோம் அதுவும் சனிக்கிழமை 7.30 8 மணிக்கு சாப்பிட்ட பின் விளையாட்டு மைதானத்தில் தான் படம்... ஆபரேட்டர் பிசிக்ஸ் லேப் டெக்னீசியன் .. ரொம்ப பொறுமைசாலி. நல்ல படம் என்றால் விடியும் மட்டும் திருப்பி திருப்பி போட சொல்லுவாங்க. பாட்டு repeat இல்லாம படம் முடிந்த வரலாறே இல்லை. திறந்த வெளி மைதானத்தில். மூன்றாம் ஆண்டுக்கு மேலே சீனியர் எல்லாம் பால்கனியில் உக்காந்து பார்ப்பாங்க. முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு கீழே தான். ராக்கிங் களமே கீழே தான். அன்பு உறவு மலர்ந்ததும் கீழே தான் ஏன்னா சிஐடியில் வருஷம் முடிய முடிய மெச்சூரிட்டி கூடும். ஆனா சிலர் அஞ்சு வருஷம் முடிஞ்சாலும் சேட்டை குறையாது "நினைத்தலே இனிக்கும்" படம் காலை 3 மணிக்கு வரை ஓட்டுனது இந்த திறந்த வெளி திரை அரங்கம் தான் சிஐடி எல்லா வருஷ மக்களுக்கும் பேசி பழக ஞ்.. இது தான் களம் .ஒருமுறை பக்கத்து பாலிடெக்னிக் பசங்க சிஐடி முதலாம் ஆண்டு பசங்கள ராக்கிங் பண்றத கேட்டு மேலே இருந்து சீனியர் கீழ வந்து பாலிடெக்னிக் பசங்கள பண்ணுன ராக்கிங் மறக்க முடியாது. 16MM திரைக்கு பின்னால நல்ல வெளிச்சத்தில் ஆட வைச்சு ரயில் ஓட்டம் ஓட வச்சதை நினைத்தாலே சிளீப்புதான்

ஆமா நீங்க "அவன் தான் மனிதன்" படத்தை 16 தடவை பார்த்தேங்களாமே ..என கேட்க "யார் கவிஞர் சொன்னானா" ? ஆமா காரணமே அவன்தான் ஒவ்வொரு அண்ணன்மார் அவனை தேடி ரூமுக்கு வருவாங்க .எதோ கிடைத்த கோழி போதும் என தினசரி என்ன கூட்டி போனாங்க. ம் .என்ன வருத்தமுன்னா ஒரு தடவை கூட முழுசா பார்க்கல .. பெரும்பாலும் மூன்றாம் ஆண்டுக்கு மேல சீனியர் ராக்கிங் என்றாலே கோவை டவுண்ல படத்துக்கு கூட்டி போய்ட்டு இந்தியன் ஹவுஸ்ல பாம்பே டோஸ்ட் காபி அல்லது டிலைட் தியேட்டர்ல ஷோலே போல இந்தி படம் பார்த்துட்டு அங்கண்ணன் கடை பிரியாணி வாங்கி தருவது தான் . மெட்ராஸ் கார பசங்களுக்கு எப்போவும் சென்ட்ரல் தியேட்டர்ல இங்கிலீஷ் படம் தான் நாங்க ஆனந்தா செட்டிநாடு புல் மீல்ஸ் சாப்பிட்டு விட்டு ராயல், இருதயா தியேட்டர்ல படம் பார்த்துட்டு இரவு சப்பாத்தி மட்டனுக்கு ஆஜர் ஆயிடுவோம்.இப்படி . சிஐடி படித்த காலத்து சினிமா ரொம்ப நாள் ஓடுச்சு ..

தூத்துகுடியில் வேலை பார்த்த இடத்திலயும் நகரியத்தில் முதல்ல 16mm படம் போட்டாங்க, நான் நகரிய கிளப் செயலாளர். என் நண்பரின் சினிமா தியேட்டர் விற்பனைக்கு வர நாங்க 35mm ப்ரொஜெக்டர் மட்டும் வாங்கி திறந்த வெளி மைதானத்தில் பில்டர் துணியில் திரை செய்து எட்டுமணிக்கு சாப்பிட பின் புது படம்

போடுவோம்.( சிறுவயதில் பழைய பல்பில் தண்ணீர் நிரப்பி டார்ச் லைட் மூலம் பிலிம் காட்டிய ஞாபகம்). சினிமா எங்க வாழ்க்கையில் ஒன்றானது அதனால் தான் எங்களில் எம் .ஜி ஆர், ரஜினி இன்னும் வாழ்ந்துகிட்டு இருக்கிறார்கள் .. சென்னை மாறி வந்தப்போ தூத்துக்குடி போலவே உள்ள நங்கநல்லூர். மவுண்ட் ரோட்டுக்கு போகாமல். வெற்றிவேல் தியேட்டரில் குடும்பத்தோடு மாதம் ஒரு படம். பசங்க வளர்ந்தப்போ படம் போறேதே இல்லை. அப்பதான் நம்ம மூத்த அண்ணன் ஐயப்பன் அய்யா தலைமையில் CITTA சென்னையில் சிறப்பாக இயங்கிய நேரம். இதே பிரசாத் ஸ்டூடியோ நிறுவனம்உரிமையாளர் பழைய மாணவர் . CIT குடும்பத்திற்கு புது படம் பார்க்க வசதி செய்து தந்தாங்க... பல படம் குடும்பத்தோடு பார்த்து இருக்கோம் .. சிஐடியில் படித்த புண்ணியம் 68 வயதிலும் எங்களது சினிமா பார்க்கும் வாய்ப்பு குறையாமல் ... நம்ம ரமேஷ் தம்பி பிரசாத் ஸ்டூடியோ நிறுவனம் சினிமா கொடை தர கேட்டவுடன் தாராளமாக ரன் பேபி ரன் என பெயரில் வந்த படம் 2023 மார்ச் 4ல் நமக்காக திரையிட்டாங்க. 150 பேர் வாரேன் சொன்னாங்க 100 க்கு குறையாம வராங்க .. .

